Registered as a Newspaper in Ceylon ★★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (6-5-66) இதழ் 88

பராபவ சித்திரை 23 முஹர்ரம் பிறை 14 வெள்ளிக்கிழமை




## கிருஷ்ணன் இல்லை

திருவனந்தபுரம், மே 5 பிரபல இந்திய டென்னிஸ் ஆட்டக்காரர்களான திரு. ஆர். கிருஷ்ணன், திரு. முகர்ஜி ஆகிய இருவரும் இலங்கைக்கு எதிரான டேவிஸ்கப் போட்டியில் கலந்துகொள்ள மாட்டார்கள் எனச் சசெய்திகள் கூறுகின்றன.

கிருஷ்ணன் தனது மணிக்கட்டுக்கு வைத்திய சிகிச்சை

(6-ம் பக்கம் பார்க்க)

# ஊழல்களைக் களைய மந்திரி திட்டம்

## மந்திரி சபை அங்கீகாரம்

### பார்லிமெண்டுக்கு விரைவில்வரும்

யாழ்ப்பாணம், வியாழன்

உள்ளூராட்சி அதிகார சபையின் நிர்வாகத்தில் உள்ள ஊழல்களைக் களையும் பொருட்டு உள்ளூராட்சி மன்றங்களுக்கும் உள்ளூராட்சி அதிகார சபைக்குமிடையே உள்ள அதிகாரப் பிரச்னை, ஊழியர் நியமனம், சேவை நிபந்தனை, இடமாற்ற நிர்வாகங்கள் என்பன சம்பந்தமாக உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் மந்திரிசபைக்குச் சமர்ப்பித்த புதிய யோசனைகளை மந்திரி சபை அங்கீகரித்துள்ளதாகத்தெரியவருகிறது.

உள்ளூராட்சி அதிகார சபை தற்பொழுது இயங்கும் முறை அபிவிருத்தியடைந்து வரும் உள்ளூராட்சி மன்றங்களுடைய முன்னேற்றத்திற்கு தடையாயிருக்கிறது என்பதை இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் மந்திரியின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளனர்.

உள்ளூராட்சி மன்றங்களில் கடமை புரியும் ஊழியர்களின் நியமனம், இடமாற்றம் சேவை நிபந்தனை, ஊழியர்களின் ஒழுங்கு நடவடிக்கைகள் என்பனவற்றில் கடந்த காலங்களில் உள்ளூராட்சி அதிகாரசபைக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்குமிடையே ஒத்துழைப்

(6-ம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் உலக பௌத்த மகாநாடு

### 9-ம் திகதி ஆரம்பம்

கொழும்பு, வியாழன்

வருகிற 9ந் தேதி இங்கு நடைபெறவிருக்கும் உலக பௌத்த சங்க மகாநாட்டில் உலகெங்குமுள்ள பௌத்த நாடுகள் கலந்துகொள்கின்றன.

பௌத்த மதத்தைச் சேர்ந்த தேரவாத, மகாயாண பிரிவுகளைச் சேர்ந்த குருமார்கள் ஒரே மேடையில் அப்போது ஒன்றுகூடுவார்கள். இலங்கை, பர்மா ஆகிய நாடுகள் தேரவாத செல்வாக்குக்கு உட்பட்டிருக்கின்றன.

இரு பிரிவுகளுக்குமிடையே சிறந்த நல்லெண்ணமும், உறவும் இந்த மகாநாட்டின் மூலம் ஏற்படுமென நம்பப்படுகிறது. ஏற்கனவே மகாநாட்டில் கலந்துகொள்ளும் 11 பிரதிநிதிகள் கொழும்பு வந்திருக்கிறார்கள். பாரதத்தின் சார்பாக திருமதி சௌத்ரி ஒரு பார்வையாளராகக் கலந்துகொள்கிறார்.

பர்மா, லாவோஸ், கம்போடியா, தாய்லந்து ஆகிய நாடுகளின் சங்க ராஜாக்கள் உட்பட இம்மகாநாட்டில் 50 வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கலந்துகொள்கிறார்கள்.

சிக்கிம், லடாக், நேபாளம், இந்தியா, பாகிஸ்தான், தென்கொரியா உட்படச் சகல பௌத்த நாட்டுப் பிரதிநிதிகளும் இதில் பங்குபற்றுவார்கள்.

யாழ். இ போ. ச. பழைய ஊழியருக்கு

## வருடாந்த சம்பள உயர்வு இன்னும் இல்லை

யாழ்ப்பாணம், வெள்ளி

சிங்கள மொழிச்சட்டத்தின் காரணமாக பழைய அரசாங்க ஊழியர்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வருடாந்த சம்பள உயர்வு இதுவரையும் யாழ்ப்பாணத்திலுள்ள இ. போ. ச. ஊழியர்களுக்கு வழங்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக ஊழியர்கள் தங்கள் சங்கங்கள் மூலம் சம்பந்தப்பட்ட மேல் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டும் பேச்சுவார்த்தைகள் நடத்தியும் ஒருவித பலனும் கிடைக்கவில்லையாம்.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த தேசிய சேவை அமைச்சின் உதவிப் பாராளுமன்றக் காரியதரிசி திரு. வெலகெதரா விடமும் ஊழியர்கள் இது சம்பந்தமாகமுறையிட்டுள்ளனர்.

அரசாங்க இலாகாக்களில் சிங்கள மொழிச் சட்டம் காரணமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த வருடாந்த சம்பள உயர்வு தேசிய அரசாங்கத்தின் புதிய உத்தரவைத் தொடர்ந்து எல்லா அரசாங்க இலாகாக்களிலுமுள்ள ஊழியர்களுக்கு பல மாதங்களுக்கு முன்னரே வழங்கப்பட்டிருந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

## ரூ. 3000 பெறுமதி மீன்பிடி வலைகள் கைப்பற்றப்பட்டன

### கரையூர் பொலிஸாரின் உஷார் நடவடிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

வலைத்திருட்டுகள் சம்பந்தமாக கரையூர் பொலிஸாருக்கு நேற்று கிடைத்த தகவல்களைத் தொடர்ந்து கரையூர் பொலிஸைச் சேர்ந்த சார்ஜண்ட் துரைசிங்கம் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியொன்று மூவாயிரம் ரூபாய் பெறுமதியான சுமார் இருபது வலைகளை கைப்பற்றியது.

இந்த வலைகள் யாவும் கரையூரில் நேற்று கைப்பற்றப்பட்டன.

வலைகள் இருந்த படகு ஒன்று பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது. கரையூரில் அதிகரித்துவரும் வலைத் திருட்டுக்களை தடைசெய்வதில் கரையூர்பொலிஸ்மேற் கொண்ட உஷார் நடவடிக்கையின் ஒரு பலனாகவே நேற்று மூவாயிரம் ரூபாய் பெறுமதியான திருடப்பட்ட வலைகள் கைப்பற்றப்பட்டன.

## கூப்பன் யாருடையது?

யாழ்ப்பாணம், வெள்ளி

வை சி. சி. கு. தேநீர் கடையில் மூன்று கூப்பன் புத்தகங்கள் நேற்று கண்டெடுக்கப்பட்டன. உரியவர் தகுந்த [illegible] காட்டி 'ஈழநாட்டில்'பெற்றுக்கொள்ளலாம்.

## 30 M 0776

### உங்களின் அதிர்ஷ்டம் எப்படி?

கொழும்பு, வியா.

கொழும்பில் இன்று பிற்பகல்இழுக்கப்பட்ட 88-வது இலக்க தேசிய சுவீப்பின் முதல் மூன்று அதிர்ஷ்டடிக்கட்டுகள் வருமாறு:

1-ம் பரிசு
30 M 0776 - ரூ. 1,00,000
2-ம் பரிசு
03 L 0411 - ரூ. 40,000
3-ம் பரிசு
68 H 0167 - ரூ. 10,000

இதுதவிர100 டிக்கட்டுகளுக்கு தலா ரூ. 2,699 வழங்கப்படும்.

## போக்குவரத்து செலவு கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம், வெள்ளி

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு மார்ச் மாதத்திற்குரிய 'போக்குவரத்துசெலவு' இதுவரை வழங்கப்படவில்லையெனத் தெரியவருகிறது.

இக் காரியாலயத்தைச் சேர்ந்த சுகாதார வைத்திய அதிகாரி, பொது சுகாதார தாதிமார், பொதுசுகாதார இன்ஸ்பெக்டர், போதனாசிரியை ஆகியோர் தங்களுக்குரிய மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான போக்குவரத்து செலவுத் தொகையை ஏற்கனவே தலைமைக் காரியாலயத்துக்கு அனுப்பி விட்டனர். என்றும் ஆனால் இதுவரை மார்ச் மாதத்துக்குரிய போக்குவரத்து [illegible] கிடைக்கவில்லையென்றும் கூறப்படுகிறது.

ராஜேந்திரன் விஜயம்

## தியேட்டர் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தினர்

### சினிமா நடிகரைப் பார்க்கவந்த மக்களின் உணர்ச்சி

யாழ்ப்பாணம், வியாழன்

நேற்றிரவு தென்னிந்திய சினிமா நடிகர் திரு. எஸ். எஸ். ராஜேந்திரனையும், அவரது மனைவி, நடிகை விஜயகுமாரியையும் காணச்சென்ற யாழ்ப்பாண ரசிகர்கள் பலர் ஏமாற்றத்துடன் திரும்பவேண்டி நேரிட்டது.

இந்த ஏமாற்றத்துக்குள்ளானவர்களில் பெரும்பாலும் பெண்களாக இருந்தனர்

ராஜேந்திரன் தம்பதிகள் சினிமா தியேட்டர் ஒன்றுக்கு, அவர்கள் நடித்த முத்துமண்டபம் என்ற படம் காட்டப்பட்டபோது விஜயம் செய்தனர்.

இரவு 8 மணியிலிருந்தே பல்லாயிரம் ரசிகப்பெருமக்கள் ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் அங்கு கூடியிருந்தனர். அவர் வருவதற்கு முதல் நாளிலேயே 2-ம் வகுப்பு, கலரி டிக்கெட்டுகள் தவிர இதர டிக்கெட்டுகள் விநியோகிக்கப்பட்

(6ம் பக்கம்பார்க்க)

## ஓமந்தை வழக்கு தள்ளுபடி

### 'சாரதி தர்மராஜா சாட்சியம் நம்பமுடியாது'

வவனியா, வியாழன்

ஓமந்தை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தை உடைத்து 1905 ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடியதாக ஆறு பேர்மீது குற்றஞ் சுமத்திதொடரப்பட்ட வழக்கு மாஜிஸ்டிரேட் திரு. எம். எச். அத்துருபாலுவினால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

1964-ம் ஆண்டு ஜூன் மாதம் 26-ந் திகதி ஓமந்தை ப நோ கூ சங்கத்தை உடைத்து திருடியதாகவும் பயங்கர ஆயுதங்களை வைத்திருந்ததாகவும் நமசிவாயம் விசுவலிங்கம், கனகரத்தினம் சபாரத்தினம், கந்தையா தனபாலசிங்கம், சின்னப்பு துரைசிங்கம், அமரசேன தெனுவரா அல்லது வில்பிரட் அமரசேன, கனகரத்தினம் முருகேசு ஆகிய ஆறு பேர்மீது குற்றஞ்சாட்டி யாழ்ப்பாணம் பொலிஸாரினால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவ்வழக்கு வவனியா மாவட்ட நீதிமன்றத்தில் மாஜிஸ்டிரேட் திரு, எம். எச் அத்துருபால முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

தீர்ப்பு வழங்கையில் ஒரு

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

மௌனப் பிரார்த்தனைக்கு, எந்தக் கடும் நடவடிக்கையைவிட அதிக சக்தி உண்டென்றே நம்புகிறேன். பரிசுத்தமான மனதுடன் செய்யும் பிரார்த்தனை எப்போதும் வீண் போவதில்லை. இந்த நம்பிக்கையில்தான், வேறு உதவியில்லாத நிலைமையில் நான் தொடர்ந்து பிரார்த்தனை செய்து வருகிறேன். —மகாத்மாகாந்தி

ஈழநாடு

EELA NADU, National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna: Phone: 357

[illegible] பராபவ ஆண்டு சித்திரை மீ 23 உ (6-5-66)

# ஒரு முக்கிய யோசனை

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த தமிழ்நாடு சர்வோதய பூமிதானத் தலைவர் திரு. எஸ். ஆர். சுப்பிரமணியம், நமது பொருளாதார அபிவிருத்திக்கும், வேலையில்லாக் கஷ்டங்களைக் குறைக்கவும் ஒரு முக்கிய யோசனையைக் கூறியுள்ளார். இந்நாட்டிலுள்ள ஏராளமான பனைமரங்களை சர்வோதயப் புரட்சிமூலம் பயன்படுத்தினால் நமக்குத் தேவையான சீனி, சக்கரை முதலியவற்றை உற்பத்தி செய்வதுடன் பல குடும்பங்களின் ஜீவனத்துக்கும் வழிசெய்யலாமென்றார்.

தமிழகத்திலே ஒரு பகுதியில் பத்தாயிரம் பனைமரத்திலிருந்து வருடத்தில் 300 டன் சீனியை குடிசைத்தொழில்மூலம் உற்பத்தி செய்கின்றனராம். தென்னைமரங்கள் மூலம் அதிக சீனியை உற்பத்தி செய்ய முடியுமென்றும், இங்குள்ள பனை, தென்னை இவற்றை இலங்கையில் பயன்படுத்துவதாயின், சீனிக்கும், சர்க்கரைக்கும் பிறநாடுகளை எதிர்பார்க்காமல், வெளிநாட்டுச் செலாவணியை மிச்சப்படுத்துவதுடன் சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்ளலாமென்றார். இந்தயோசனை நமக்குப் புதிதல்ல என்றாலும் நமது கற்பகதருவான பனை, தென்னை மரங்களை துஷ்பிரயோசனம் செய்து பரிதாபமான நிலையில் இருக்கின்றோம்.

இதைப்பற்றிஇங்குள்ள ஒரு தலைவரிடம் கூறியபோது, 'இங்கு கள் இறக்கவே போதிய பனை, தென்னை மரங்கள் கிடைக்காதபோது, சீனி, சர்க்கரை உற்பத்திக்கு மரம் எங்கே கிடைக்கப் போகிறது' என்றார். இது மிகவும் ஏமாற்றமளிக்கும் வருந்தத்தக்க நிலையாகும். கள்ளுக்கு மரம் கொடுத்தால் அதிக வருமானம் கிடைக்குமென்ற ஒரே நோக்கத்துடன் தான் மக்கள் பனைமரங்களைக் கள்ளுக்கட்ட விடுகிறார்கள். மதுபான உற்பத்தியை அதிகம் பெருக்குவதால், இங்கு பல குடும்பங்கள் நாசமாகின்றனவென்பதைப்பற்றி அரசாங்கமுள்ளிட்டு யாருக்கும் கவலையில்லை.

மேலும் புதுவருடம், தைப்பொங்கல் முதலிய விசேஷங்களுக்கு இரண்டு அவுன்ஸ் சர்க்கரை பங்கீட்டு முறையில் கிடைப்பது குதிரைக் கொம்பாகவுள்ளது. இங்கு இயற்கை அன்னை ஏராளமான பனை, தென்னை மரங்களை நமக்கு அளித்திருக்கையில் வெளிநாடுகளை எதிர்பார்த்துக் கொண்டு நமது செல்வத்தையும் வெளியேற்றுவது பெரிய வெட்கக்கேடு. இந்த அவலநிலையைக்கண்டு ''நிலமெனும் நல்லாள் நகைக்க'' மாட்டாரா?

தேசீய அரசாங்கத்துக்கு இதில் முக்கிய கடமையும்பொறுப்புமுண்டு. நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்றும், நமது தேவையை நாமே பூர்த்தி செய்ய வேண்டுமென்றும் ஒருபக்கம் பல்லவி பாடிக்கொண்டு, அதற்கு நேர்மாறான காரியங்களை அரசாங்கம் செய்துவருவது பெரிய துரதிருஷ்டம். மதுபான உற்பத்தியை, கண்மூடித்தனமாக, புத்தர்பெருமானின் போதனைகளுக்கு நேர்மாறாகப் பெருக்கிக் கொண்டு போகும் பெருந்தவறை யாரும் உணரவோ மாற்றவோ விரும்புவதாகத் தெரியவில்லை. தமிழ் எம். பி. மார்களும் மதுவிலக்கைப்பற்றிப் பேசவும் துணிவதில்லை. காரணம் அடுத்த பொதுத் தேர்தலில் தங்களுக்குச் சில வாக்குகள் கிடைக்காமல் போய்விடுமோ என்ற அச்சம்தான்! நாட்டின் நன்மையைவிடத் தங்கள் சுயநலமே பெரிதென்று பல அரசியல் கட்சிகளும் தலைவர்களும் நினைக்கும் வரை நமக்கு விமோசனம் ஏது?

## ஓர் எச்சரிக்கை

வேலணையிலே ஒரு கூட்டத்தில் தீவுப்பகுதிப்பிரதிநிதி திரு. நவரத்தினம் பேசுகையில், மொழி விஷயமாக ஒரு புதிய ஆபத்தைச் சுட்டிக் காட்டி எச்சரிக்கை செய்தார். தமிழ்ப் பகுதியிலே சிங்களம் கற்பிக்க 1200 சிங்கள ஆசிரியர்களை அனுப்பிவைக்கத் திட்டம் இருப்பதாயும், இங்குள்ள மக்கள் சிங்களம் பயின்றால், அதை சாக்கிட்டு சில வருடங்களில் நியாயமான தமிழ் உபயோகக் கொள்கையும் கைவிடப்படலாமென்றும், அரசாங்கப் பரீட்சைகளுக்கு தமிழ் மாணவர்கள் தமிழுக்குப் பதில் சிங்களத்திலேயே எழுதவேண்டியிருக்குமென்றும், ஆகவே இங்கு சிங்கள மொழி கற்பிப்பதை அனுமதிப்பது, ஆபத்தில்முடியுமென்றும் சொன்னார்.

தமிழர் பொதுவாக சிங்களம் கற்கவே விரும்புகின்றார்கள். ஆனால் மேற்கூறிய ஆபத்து இருப்பது மெய்யாயின், அவர்கள் சிங்களத்தைக்கற்க மறுப்பதற்கும்காரணம் உண்டு. தமிழருக்கு நியாயம் வழங்கவேண்டுமென்று கூறும் தேசிய அரசாங்கப் பிரதமர், இந்த விஷயத்தைக்கவனித்து தமிழரின் சந்தேகத்தையும், பீதியையும் நீக்க உடன் ஆவன செய்யவேண்டும். அரசாங்கசேவையில் சேர விரும்புபவர்கள் யாராயினும், சிங்களம், தமிழ் ஆங்கிலம் இம்மூன்று மொழிகளும் தெரிந்திருக்கவேண்டுமென்றும், மூன்றிலும் தேர்ச்சி பெற வேண்டுமென்றும் நிபந்தனை போடுவதாயின், தமிழர் சிங்களம் கற்பதற்கான முட்டுக்கட்டை நீங்கவும் தமிழரின் அதிருப்தியும் பீதியும் ஓரளவு [illegible] ஒருமைப்பாடு பலப்படவும் வழிபிறக்கலாம்.

# சூரிய ஒளி அடுப்பு

இந்திய தேசத் தலைவர்கள் பலர் சுதந்திரப் போராட்ட காலத்தில் சிறைவாசம் அனுபவிக்க நேரிட்டபோது அவர்களில் பெரும்பாலோருக்கு பொழுதுபோவதில்லை நேரு சிறையில் இருந்தேபல ஆங்கில நூல்களை எழுதியுள்ளார். இவரைப் போன்றே பலர் சிறைச்சாலைக்குள் இருந்தே ஏதாவது ஆராய்ச்சியில் ஈடுபட்டு பொழுதைப் போக்கினர்.

காலஞ் சென்ற இந்தியாவின் முதல் ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திர பிரசாத் தன் சிறைவாச காலத்தில் ஓர் பயன் உள்ள ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். அது என்ன தெரியுமா? மனித குடும்பத்தின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான ஆராய்ச்சி தான்! விறகு, கரி, எண்ணெய், மின்சாரம் எதுவும் இன்றி இயற்கையின் சக்தியைக்கொண்டே சமையலை எளிமையாக எப்படிச் செய்யலாமென்பதே அவருடைய சிறைச்சாலை ஆராய்ச்சியாகும்

''சூரிய வெப்பத்தின் உதவியால் சமையலைச் செய்ய முடியும் என்பதே இயற்கை சக்தியின் ஆராய்ச்சி, சூரிய ஒளியின்வெப்பத்தால் சமையல் செய்யலாம் என இவ்வுலகில் முதல் முதல் நிரூபித்துக்காட்டிவிட்டார் ஜனாதிபதி;

ஜனாதிபதி முதன் முதலில் ஓர் மரத்தால் அடுப்பு ஒன்றைச் செய்தார். அதன் மீது கண்ணாடி ஒன்றையும், சூரிய ஒளியைப் பிரதிபலிக்கச் செய்யும் பாதரசம் பூசிய கிண்ணம் ஒன்றையும் பொருத்தினார். இந்த அடுப்பை சூரியஒளி படும்படி செய்து, கிண்ணத்தில் நீரை ஊற்றினார். சூரிய ஒளியை பாதரசம் பூசப்பட்ட பளபளக்கும் கிண்ணம் கிரகித்து அதனால் கிண்ணம் நீரை வெப்பம் அடையச் செய்தது. இதன்மூலம் முதலில் நீரைக் சொதிக்க வைக்கவும், கொதிக்கும் நீரில் உணவுப் பண்டங்களைப்போட்டு சமையல் செய்யவும் தெரிந்துகொண்டார்.

ஜனாதிபதி செய்த இந்த அடுப்பு இப்பொழுது புதுடில்லியில் தேசிய 'பிசிகலே போரடரி'யில் வைக்கப்பட்டுள்ளது. விஞ்ஞானிகள் அந்த அடுப்பின் அமைப்பை மாதிரியாகக் கொண்டு, அதைவிட சக்திவாய்ந்த சூரிய அடுப்புகளைத் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். மேற்படி 'லேபோரடரி'யில் ஓர் விஞ்ஞான முறையில் உள்ள சமையற் கூடமும் உள்ளது. டாக்டர் எம். எல். சாய் என்னும் இளைஞர்தான் இந்த சூரிய அடுப்பு ஆராய்ச்சி இலாகாவின் தலைவர்.

மேலே குறிப்பிட்ட சமையற்கூடத்தில் பற்பல பெரிய சிறிய அளவுகளில் ஒளி பிரதிபலிக்கும் கிரணங்கள் 'டிரிப்பாய்' என்னும் பிரதிபலிக்கும் கிண்ணம் ஒன்றை உலோகத்தால் செய்து பளபளவென்று மெருகிட்டு வைத்துள்ளனர். அக்கிண்ணத்தின் மையத்தில் ஓர் அடுப்பு வைக்கப்பட்டுள்ளது.

அந்த அடுப்பிற்கு அருகாமையிலேயே கண்ணாடி ஒன்றையும் வைத்துள்ளனர். இதற்கு 'ஹீட்டிராய்' எனப் பெயர். இதை உஷ்ணம் கிரகிக்கும் கருவி என்பர். இந்தக் கண்ணாடியில் ஒளி பட்டு அந்த ஒளி வெப்பத்தைக் கிண்ணத்திற்கு அனுப்பும். இந்த அடுப்பில் பத்தே நிமிஷத்தில் காய்கறிகளைச் சமைத்துவிடலாம். மின்சார அடுப்பைவிடக் கடுமையான வெயில் நாளில் மிக விரைவாகச் சூரிய அடுப்பில் சமையல் செய்யலாம்.

தற்சாலத்தில் அநேக வீடுகள் மொட்டைமாடிகளாக உள்ளன. அம்மாடியில் சூரிய ஒளி உள்ளே வரும்படியாகப் பலகை போன்ற ஒளிபுகும் கண்ணாடிகளைப் பதித்துவிடவேண்டும். கண்ணாடிப் பலகைகள் வட்டவடிவில் இருத்தல் நன்று கண்ணாடிக்குக் கீழே வட்டக்குழாயைக் கண்ணாடியுடன் பொருத்திவிட்டால் சூரிய வெப்பத்தை மொட்டை மாடியில் பதித்த கண்ணாடி கிரகித்து அந்த வெப்பத்தைக் கீழே பொருத்தப்பட்ட குழாய்வழியே அனுப்பும்.

தற்காலத்தில் நீருக்குள் ஹீட்டரைப் போட்டு மின்சாரத்தைச் செலுத்தினால் நீர் கொதிப்பதுபோல் அங்கே அமைக்கப்பட்ட குழாய் சூரிய வெப்பத்தால் வெப்பமடைந்து உடன் நீருக்குள் குழாய் அமிழும்படி அமைத்து நீரைக் கொதிக்கவைக்கலாம் இதன் மூலம் தேவையான வெந்நீர் கிடைக்கும்.

சூரிய வெப்பத்தாலாகாத காரியங்களே இல்லையென்று திட்டமாகக்கூறலாம். சூரிய வெப்பத்தால் குளிர்சாதனங்களைக்கூட ஏற்படுத்தலாம். சூரியனால் கிடைக்கும் வெப்பத்தால் சிறு இயந்திரத்தைக்கூட இயக்கி நிலத்திற்கு நீரைப் பாய்ச்சலாம். சூரியவெப்பம் மிகுதியாகவுள்ள நம் இந்தியாவில் ஒருசிறு வெப்பத்தைத் தவிர ஏனைய வெப்பமனைத்தும் வீணேயாகிவிடுகின்றதே.

## கலைஞருக்கு இசைமணிப் பட்டம்

உடுப்பிட்டி, வியாழன்

''தமிழிசைக்கும் சைவத்துக்கும் நிறையத் தொடர்புண்டு. இசைக்கும் இறைவனுக்குமுள்ள தொடர்பை அறிந்தே சைவபெரியார்களும் நாயன்மார்களும், நற்கருப்பஞ் சாற்றின்லே தேன் கலந்தது போன்று இனிய தேவாரங்களைப் பாடிவைத்துச் சென்றுள்ளார்கள் அவர்கள் பாடிவைத்த தேவாரப் பண்களையும், கீர்த்தனைகளையும் வெகு அருமையாக நல்ல இசைஞானத்தோடு வயலின் மீட்டிய திரு. ஏ. சிவசுவாமி உண்மையிலேயே சைவப் பெருமக்களாலும், இசை வல்லுனர்களாலும் போற்றப்பட வேண்டியவர்.''

உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் கரவை வெல்லன் விநாயகராலயத்தில் நடைபெற்ற திரு. ஏ. சிவசுவாமியின் வயலின் இசைநிகழ்ச்சியைப் பாராட்டிப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. சிவசுவாமிக்கு 'இசைமணி' என்ற கௌரவப் பட்டத்தை உடுப்பிட்டி எம். பி. வழங்கினார். கரவை வெல்லன் விநாயகராலய தர்மகர்த்தா சபைச் செயலாளர் திரு. எஸ். விக்னேஸ்வரன் உட்பட மற்றும் பலர் சிவசுவாமியை பாராட்டிப் பேசினர்.

# ஐயாறன் எழுதுகிறது

முந்தாநாள் சித்ராபௌர்ணமி. சித்திரபுத்திரனார் விரதம். ஒரு கோவிலில் கஞ்சிகாய்ச்சி, வந்தவர்களுக்கெல்லாம் சில தாய்மார்கள் கஞ்சி வழங்கியதைக்கண்டேன். குழந்தைகள் ஏழை பணக்காரர் என்ற வேற்றுமையின்றி, சிரட்டையிலே கஞ்சியைப் பிரசாதமாகச் சாப்பிட்டு மகிழ்ந்தனர்.

கஞ்சி வழங்கியவர்களுக்கு மட்டுமன்றி கோவிலுக்கு வந்து கும்பிட்டு சாப்பிட்டவர்களுக்கும் சித்திரபுத்திரனார் நல்ல கணக்கு எழுதியிருப்பாரென்றே நினைக்கிறேன். இது எப்படியாயினும் நமது கோவில்கள் மூலம் எவ்வளவு நல்ல சமூக சேவை நடைபெற இடமிருக்கிறதென்பதை அன்று உணரமுடிந்தது.

நமது வீடுகளில் யாரும் இப்படித் தர்மக்கஞ்சி ஊற்றினால் ஏழைகளும் வந்து அதைவாங்கிச் சாப்பிடக் கூசுவர். ஆனால் தெய்வத்தின் பெயரால் பிரசாதமாக வழங்குவதாயின், செல்வந்தர்களும் ஆவலுடன்அதைச் சாப்பிடுகின்றார்கள். இதில் இளப்பமெதுவுமில்லை. ஒருநாள் மட்டுமன்றி அடிக்கடி நம்கோவில்களில் இப்படி பிரசாதங்கள் போட்டு, மக்களின் பசியாற்றினால், சமூகத்திலே அதிருப்திகளும் கூடாத இயக்கங்களும் தலைதூக்கமாட்டா. பசிப்பிணியை நீக்கும் கைங்கரியத்தைவிட பெரிய சமூக சேவை வேறு எதுவும் இருக்கமுடியாது.

ஃ ஃ ஃ

தமிழகத்திலிருந்து வந்திருந்த சர்வோதய இயக்கத் தலைவரான சுப்பிரமணியம் அவர்கள் புதுச்சேரியைச் சேர்ந்தவர். டில்லியிலிருந்து பீகிங் வரை செல்லப் புறப்பட்ட சமாதான தூதுக் கோஷ்டியில் ஓர் அங்கத்தவர். 2000 மைல் தூரம் நடந்து பர்மா எல்லையை அடைந்தபின் மேலே செல்ல முடியாமல் போயிற்றும். பகைநாகர்கள் பிரச்னையைச் சுமுகமாகத்தீர்க்க முடியுமென்ற நம்பிக்கையையும் தெரிவித்தார்.

இலங்கையில் கதர் உற்பத்திக்கு வழியுண்டா என்று கேட்டேன். இங்கு அதற்கான வசதி எல்லாம் இருப்பதாயும் இலங்கை அரசாங்கம் விரும்பினால், இங்கு அதற்கான உதவிகளை எல்லாம் செய்யலாமென்றும் கூறினார்.

இங்கு ஒரு கஜம் கதர் துணி வாங்கவும் முடியாமலுள்ளது. ஏற்கெனவே இங்கு கைத்தறிகள் நல்ல முறையில் வேலைசெய்வதால், கைராட்டை மூலம் தேவையான நூலையும் உற்பத்தி செய்ய ஒழுங்கு செய்யின் தேவையான கதர் துணிகளை இங்கேயே உற்பத்திசெய்யலாமென்றார் அத்தலைவர்.

கதர் ஒரு நல்ல குடிசைத் தொழில். வேலையில்லாக் கஷ்டத்தை ஓரளவு நீக்கவும் கூடியது. மகாத்மா காந்தி இதைப்பெரிதும் வற்புறுத்தினார். இந்தியாவிலே கதர் மூலம் லட்சக்கணக்கான ஏழைக் குடும்பங்கள் பிழைக்கின்றன. இலங்கையிலும் சிறப்பாக யாழ்ப்பாணத்திலும் இந்த முக்கியமான குடிசைத் தொழில் வளரச் செய்வது பலருக்கு உதவியாக இருக்கும். நமது எம். பி. மார்கள், அரசாங்கத்தைத் தூண்டி, இதற்கான ஏற்பாட்டைச் செய்வார்களா? இந்திய சர்வோதய இயக்கத்தாரிடமிருந்து இதுபற்றிய உதவியைப் பெற்றால், அது நம்நாட்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிட்டோ, நாஸர், இந்திரா சந்திப்பர்

## பேச்சு நடத்த இரு தலைவர்களும் புதுடில்லி வரலாம்

### ஸ்ரீமதி காந்தியின் விருப்பத்தை பொறுத்து காலம், இடம் தீர்மானிக்கப்படும்

அலெக்ஸாண்டிரியா, மே 5

**நேற்று இங்குசந்தித்த யூகோஸ்லேவிய அதிபர் மார்ஷல் டிட்டோவும், ஐக்கிய அராபியக் குடியரசு அதிபர் நாஸரும் இந்தியப் பிரதம மந்திரி ஸ்ரீமதி இந்திராகாந்தி யுடன் முத்தரப்பு பேச்சு நடத்துவது குறித்து ஆராய்ந்தார்கள் என கெய்ரோ செய்திகள் தெரிவித்தன.**

இந்த உச்சி மகாநாட்டுக்கான காலமும், இடமும் ஸ்ரீமதி இந்திராகாந்தியின் விருப்பத்தைப் பொறுத்து தீர்மானிக்கப்பட வேண்டும் என அவர்கள் முடிவு செய்தனர். வேலைப்பளுவின் காரணமாக ஸ்ரீமதி காந்தி வெளிநாடு வர இயலாவிட்டால், இரு தலைவர்களும் டில்லி வந்து அவருடன் மகாநாடு நடத்துவதெனவும் தீர்மானித்திருக்கிறார்கள்.

டிட்டோவும் நாஸரும் நேற்று இரண்டரை மணி நேரம், சர்வதேச நெருக்கடி நிலையைத் தளர்த்துவதில் மண்டல சார்பற்ற நாடுகள் மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் குறித்துப் பேச்சு நடத்தினார்கள்.

உடகபடைக்குறைப்புக்கு மண்டலசார்பற்ற நாடுகள் எப்படி உதவ முடியும் என்பது குறித்தும் அவர்கள் ஆலோசனை நடத்தியதாக அறிவிக்கப்பட்டது.

## 5 ரொடீஷிய பொலீஸ் பலி

லுஸாகா, மே 5

ரொடீஷியாவில் தடை செய்யப்பட்ட 'ஸிம்பாவே ஆபிர்க்க தேசிய கட்சி'யைச் சேர்ந்த கொரில்லாக்கள் நேற்று நடத்தியதுப்பாக்கச் சண்டையில் 5 ரொடீஷியப் பொலிசாரைக் கொன்று விட்டதாக கட்சியின் பேச்சாளர் ஒருவர் லுஸாகாவில் கூறினார்.

ஸாம்பியாவுக்கும் ரொடீஷியாவுக்குமிடையிலுள்ள கரீபா அணையைப் பாதுகாத்து நின்ற பொலிஸ் காவலகத்தை அவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை தாக்கிய போது இச்சம்பவம் நடைபெற்றதாய் அவர் கூறினார்.

12 ரொடீஷிய விமானங்களை கொரில்லாக்கள் சுட்டு வீழ்த்தியதாயும் அவர் கூறினார்.

## 1965-ம் ஆண்டு இந்திய திரைப்பட விருதுகள்

### மலையாள படத்துக்கு முதலிடம்

புதுடில்லி, மே 5

1965-ம் ஆண்டுக்கான திரைப்பட விருதுகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

மலையாளப் படமான மான "செம்மீன்" முதலாவது சிறப்புவிருதைப்பெறுகிறது.

'அதிதி' என்ற வங்காளப் படம் இரண்டாவது சிறப்புக்கான பாராட்டுப்பத்திரம் பெறும்.

'சோட்டி சோட்டிபுத்தே' என்ற ஹிந்திப்படம் 3-வது சிறப்புவிருது பெறுகிறது.

'சஹீத்' என்ற ஹிந்திப் படம் சிறந்த கதைப்படமாகக் கணிக்கப்பட்டு ரூ.20000 பரிசு வழங்கப்படவிருக்கிறது.

'சர்க்கரை பொம்மையின் அற்புத செயல்கள்' என்ற குழந்தைகள் படத்துக்கு அகில பாரத பாராட்டுப் பத்திரமும், ரொக்கப்பரிசும் அளிக்கப்படுகின்றன.

ராஷ்டிரபதி தங்கப்பதக்கத்துக்கான டாக்குமெண்டரிபடம் எதுவும் இல்லை என அறிவிக்கப்பட்டது.

காவியமேளா, ஓடையில் நின்னு, முறைபெண் ஆகிய மலையாளப் படங்களும்; அந்தஸ்து, பல்லபடியுத்தகுமனுடிலு ஆகிய தெலுங்குப் படங்களும்; சத்திய ஹரிச்சந்திரா, மிஸ் லீலாவதி, மதுவேமாடிஞேடு ஆகிய கன்னடப் படங்களும், குழந்தையும் தெய்வமும், திருவிளையாடல் ஆகிய தமிழ்ப்படங்களும் வெள்ளிப்பதக்கங்கள், பாராட்டுப் பத்திரங்கள் ஆகியனவற்றைப் பெறுகின்றன.

## மலேசியாவும் இந்தோனேஷியாவும்

ஜாகர்த்தா, மே 5

மலேசியாவுடன் நேரடி சண்டைக்கு இனி அவசியமில்லை என்றும், ஆனால்மலேசிய எதிர்ப்புக்கொள்கையில் தளர்ச்சி இருக்கக்கூடாது என்றும் இந்தோனேஷிய பாதுகாப்பு மந்திரி ஜெனரல் சுகர்ட்டோ கூறினார்.

அதேசமயம் மலேசிய எல்லையிலுள்ள இந்தோனேஷியத் துருப்புக்கள் விலக்கிக் கொள்ளப்பட விருப்பதாய், தமக்கு தகவல் கிடைத்திருக்கிறதென பிலிப்பைன்ஸ் வெளிநாட்டு மந்திரி கூறியிருக்கிறார்.

மலேசிய துணைப் பிரதமர் துன் அப்துல் ரஸாக் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில், இந்தோனேஷியாவுடன்முன் நிபந்தனையற்ற பேச்சு நடத்தத்தயார் எனக் கூறியிருக்கிறார்.

## பர்மா அகதிகள்

சென்னை, மே 5

பர்மாவிலிருந்து இடம் பெயர்ந்துவந்தவர்களுக்கு புதிய நூற்பு ஆலை ஒன்று திறக்கப்படவிருக்கிறது. நாட்டிலுள்ள இதர ஆலைகள் விரிவுபடுத்தப்படும்.

காய்கறித் தோட்டங்கள், பாற்பண்ணைகள், ஆதரவற்ற மாதர்களுக்கு இல்லம் ஆகியனவும் நிறுவப்படும்.

## மாதம் தோறும் அனுமதி பெறவேண்டும்

### நேட்டோ விமானங்கள் பறக்க பிரான்ஸ் நிபந்தனை

பாரிஸ், மே 5

அடுத்தமாதம் முதல் திகதிமுதல் தமது பிரதேசத்தின் வழியாக நேட்டோ படைவிமானங்கள் பறக்கவோ அல்லது தரையிறங்கவோ மாதம்தோறும் அனுமதி பெற வேண்டும் என பிரான்ஸ் அறிவித்திருக்கிறது.

இதுவரை ஆண்டுக்கு ஒரு தடவை மட்டும் அனுமதி பெறப்பட்டு வந்தது.

இதன்காரணமாக 30 நாள் தவணையில் இந்தஅனுமதியை ரத்துச் செய்ய பிரான்சுக்கு வாய்ப்பு இருக்கும்.

பிரான்சின் புதிய நிபந்தனை அமெரிக்காவைத்தான் அதிகம் பாதிக்கும் எனக் கூறப்படுகிறது. ஏனெனில் ஆண்டு ஒன்றுக்கு 1 லட்சம் தடவைகள் அமெரிக்க விமானங்கள் பிரான்ஸ்மீது பறக்கின்றன.

இதற்கிடையில் நேட்டோவின் வருங்காலம்பற்றியும், அதன் ராணுவ, அரசியல் தலைமையகங்களை லண்டனில் அமைப்பதுபற்றியும் ஆலோசிக்குமுகமாக பிரிட்டிஷ் பிரதிநிதி ஒருவர் அமெரிக்காவுக்கும், கனடாவுக்கும் அனுப்பப்படுவார் என அறிவிக்கப்பட்டது.

## ஹாக்கியும் உதைபந்தும்

கிழக்கு பெர்லின், மே 5

இந்தியாவுக்கும் கிழக்கு ஜெர்மனிக்குதுடையேநடைபெற்ற மூன்றுவது இறுதி காக்கிப் போட்டியில் இந்தியா 1-0 கோலினால்வெற்றி பெற்றது.

மணிலாவில் சர்வதேச இளைஞர் கால்பந்தாட்டப் போட்டியில் இஸ்ரேல் ஹாங்காங்கை 6-1 கோல்களால் தோற்கடித்தது. இந்தியா ஜப்பானை 2 கோல்களால் தோற்கடித்தது.

## ஹெலிகோப்டர் வீழ்ந்து 21 பேர் பலி

சைகோன், மே 5

தென்வியட்னமில் அமெரிக்க ஹெலிகோப்டர் ஒன்று வீழ்ந்ததால் அதிலிருந்த 21 அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்டனர். இந்த விமானம் வெடிமருந்துகளையும் [illegible] டது.

## "சர்வதேச கமிஷன் மேற்பார்வையில் வியட்னமில் தேர்தல் நடத்த வேண்டும்"

### பிரிட்டன் யோசனை

லண்டன், மே. 5

வியட்னமில் நடைபெற இருக்கும் பொதுத் தேர்தல் அங்குள்ள சர்வதேச கண்காணிப்புக் கமிஷனின் மேற்பார்வையில் நடைபெற வேண்டும் என பிரிட்டிஷ் அரசாங்க பேச்சாளர் ஒருவர் கூறினார்.

இதற்கிடையில் வடவியட்னமுக்கு ரஷ்யா அனுப்பும் ராணுவ சப்ளைகளை சீன வழியில் நிறுத்திவைத்திருப்பதாக, ரஷ்ய பாதுகாப்பு மந்திரி மலினேவ்ஸ்கி கூறியதை சீன மறுத்திருக்கிறது.

"மலினேவ்ஸ்கி ஒரு பொய்யர்" என சீன குற்றஞ்சாட்டியிருக்கிறது. ரஷ்யாவும் அமெரிக்காவும் கூட்டாக உலக ஆதிக்கம் கொள்ளமுயற்சி செய்துவருவதாயும், ரஷ்யா வடவியட்னமுக்கு பழைய, சிதைந்து போன ஆயுதங்களையே அனுப்புகிறது என்றும் சீனப் பேச்சாளர் கூறினார்.

நிற்க:

சீனாவை ஐ. நா.வில் சேர்க்கலாமா என்பதற்கு முன் அது தன் வழிகளை மாற்றியமைத்துக்கொள்ள வேண்டும் என அமெரிக்க உப ஜனாதிபதி ஹம்ப்ரி கூறினார். போர்மோஸாவை உரிமை கோருவதையும் அது நிறுத்தவேண்டும் என திரு. ஹம்ப்ரி கூறினார்.

## ஜோன்ஸன் - மேத்தா சந்திப்பு

வாஷிங்டன், மே 5

இந்திய திட்ட மந்திரி திரு. அசோக்மேத்தா நேற்று அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸனுடன் ஒரு மணி நேரம் தனிப்பட்ட முறையில் பேச்சு நடத்தினார்கள்.

திரு. மேத்தா இன்று மீண்டும் ஜனாதிபதியைச் சந்திக்கிறார். நேற்றைய பேச்சின் போது இந்தியாவின் பிரச்னைகளை திரு. ஜோன்ஸன் ஆழ்ந்த அக்கறையுடன் கேட்டதாகக் கூறப்பட்டது.

திரு. மேத்தா நேற்று உலக வங்கித் தலைவரையும் 4-வது முறையாகச் சந்தித்தார்.

வெளிநாட்டு மந்திரி திரு. ரஸ்கை அவர் மற்றொரு முறை சந்திக்க இருக்கிறார்.

## மைக்கேல்ஸ்காட்

கல்கத்தா, மே 5

நாகா அமைதிப் பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெறும் எனத் தாம் நம்புவதாக இந்தியாவிலிருந்து வெளியேற்றப்பட்ட வண. மைக்கேல்ஸ்காட், கல்கத்தாவிலிருந்து லண்டனுக்குப் புறப்படுமுன் கூறினார். இதற்குப் பரிகாரம் காண தாம் உதவி செய்யப்போவதாயும் அவர் கூறினார்.

## 481 கிராமங்களில் பற்றுக்குறை

புதுடில்லி, மே 5

ராஜஸ்தானில் 3 1/2 லட்சம்ஜனத் தொகைகொண்ட 481 கிராமங்கள் பற்றுக்குறைப் பிரதேசமாகப் பிரகடனம் செய்யப்பட்டிருக்கின்றன.

## பிரான்ஸ்—சீன விமான சேவை

பாரிஸ், மே 5

பிரான்சுக்கும் சீனாவுக்கும் இடையே விமானப்போக்குவரத்து ஒப்பந்தம் ஒன்று பற்றி பேச்சு நடைபெறவிருக்கிறது. ஷாங்கையிலிருந்து பாரிஸ் நகருக்கு இந்தச் சேவை நடைபெறும்.

## மசூதி இடிந்து 14 பேர் பலி

டெஹ்ரான், மே 5

ஈரானில் மசூதி ஒன்றின் கோபுரம் உடைந்து விழுந்ததால் 14 பேர் கொல்லப்பட்டனர்

## பிரான்ஸ் 9 கோடி கடன்

பாரிஸ், மே 5

ராஜஸ்தானில் செம்புச் சுரங்கத்திட்டத்திற்கு பிரான்ஸ் 9 கோடி ரூபாய் கடன் வழங்கவிருக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு இது 21000 டன் செம்பை உற்பத்திசெய்யும்.

## குடிபெயர்ந்துவரும் இந்தியர்களுக்குபுனர்வாழ்வு

புதுடில்லி, மே 5

இலங்கை, பர்மா, பாகிஸ்தான் போன்றநாடுகளிலிருந்து குடிபெயர்ந்து வரும் இந்தியப் பிரஜைகளுக்கு புனர்வாழ்வு அளிப்பது சம்பந்தமாக பேச்சுவார்த்தைகள் நடத்த எல்லா ராஜ்யங்களையும் சேர்ந்த மறுவாழ்வுத்துறை மந்திரிகளை இந்திய மத்திய அரசாங்க மறுவாழ்வுத்துறை அமைச்சர் ஜகஜீவன்ராம் அழைத்துள்ளார். இந்தபேச்சுவார்த்தைகளில் தமிழ்நாட்டின் சார்பில் மந்திரி திரு. ராமையா கலந்துகொள்வார்.

## ரஷ்யாவில் இத்தாலிய ஆலை

மாஸ்கோ, மே 5

நாள் ஒன்றுக்கு 2000 மத்திய ரக பியட்கார் உற்பத்திசெய்யும் ஆலையை, இத்தாலிய பியட்கார் கம்பெனி ரஷ்யாவில் நிறுவும் என அறிவிக்கப்பட்டது இதற்கான மூலீதட்டை ரஷ்யாவும், இத்தாலியக் கம்பெனியும் கூட்டாகச்செலுத்தும்.

## வெஸாக் விழா

கொழும்பு, வியாழன்

கொழும்பு ராமகிருஷ்ண மிஷன் நிலையத்தில் வெஸாக் தினம் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

திருவாளர்கள்: எஸ். எப். டி. சில்வா, போகொட பிரேமரத்தின, சுவாமி ஸ்ரீ ரங்கானந்தா ஆகியோர் கருத்துரைகள் வழங்கினர்.

## மனேஜர் இல்லாததால் கஷ்டம்

ஓமந்தை, வியாழன்

ஓமந்தைப் பகுதியிலுள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கமொன்றிற்கு ஒரு நிரந்தர மனேஜர் நியமிக்காததன் காரணமாக சாமான் வாங்கச் செல்லும் பொது மக்கள் கஷ்டப்படவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது, இது சம்பந்தமாக மேல் அதிகாரிகளுக்கு அறிவித்தும் ஒருவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'கிராம முன்னேற்றத்துக்கு பணம்படைத்தவர் உதவுக'

யாழ்ப்பாணம், வெள்ளி

''தேவையற்ற செலவுகளைப் போக்கி, கிராமமுன்னேற்றச்சங்கம், கிராமாபிவிருத்திச்சங்கம் ஆகியவற்றின் மூலமாக ஒவ்வொரு கிராமமும் தன்னைச் சுயதிருப்தி செய்யக்கூடியவிதத்தில் மூலதனமிட்டு முன்னேற்றம் காண முயலவேண்டும்''.

ஏழாலை கலாநிதி சனசமூகநிலையத்தின் எட்டாவது ஆண்டு நிறைவில் அட்வகேட் திரு. மு. ஆலாலசுந்தரம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. அ. தவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. ஆலாலசுந்தரம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''கிராமங்கள் தோறும் வாழும் பணம் படைத்தவர்கள் அந்தந்தக் கிராமத்துக்கேற்ற விதத்தில் தொழில்களை ஆரம்பிப்பதற்கு முதலீடு செய்யவேண்டும். இதனால் கிராமமும் செழிப்புறுவதுடன், கிராமத்து மக்களும், கிராமமும் பயன்பெறக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படுகிறது.''

ஆசிரியர் திரு. எஸ். விநாயகமூர்த்தி 'கவிமன்னன் கம்பன்' என்ற தலைப்பில் உரை நிகழ்த்துகையில், மூலநூலாகிய வால்மீகி இராமாயணத்தில் காட்டாத பல புதிய அம்சங்களைத் தன் மொழிபெயர்ப்பு இராமாயணத்தில் காட்டியிருக்கிறார் என்றும், தமிழ்ப் பண்பாட்டின் உயிர்த் துடிப்பான கற்பின் மகத்துவத்தை தன் காவியம் மூலம் எடுத்துக் காட்டியிருக்கிறாரென்றும் சொன்னார்.

மயிலை சிவசண்முகதாசன், பதுமைலோலன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

# 'சுதேச வைத்திய முறைகளை ஊக்குவிக்க வேண்டும்'

மீசாலை, வியாழன்

''சித்த ஆயுள்வேத வைத்தியமுறை ஏனைய வைத்திய முறைகளிலும் பார்க்க எவ்வகையிலும் குறைந்ததல்ல. இலகுவாகக் கிடைக்கக்கூடிய ஒளஷதங்களைக் கொண்டு எந்நோய்களையும் குணமாக்கும் சித்த முறைப்படியான வைத்திய சிகிச்சை முறைகளைக் கடைப்பிடிக்கும் சுதேச வைத்திய முறைகளை நாம் ஊக்கவேண்டும். சுதேச வைத்தியர்களுக்கும் வைத்திய முறைகளுக்கும் எமது அரசாங்கமும் பொதுமக்களும் ஊக்கமளிக்கவேண்டும். எமது வைத்திய முறைகளை ஏட்டுச்சுவடிகளிலிருந்து எடுத்து நூல்வடிவமாக்கி சகலருக்கும் உதவக்கூடிய முறையில் இந்த நிரந்தரசெல்வத்தை சௌக்கிய வாழ்வுக்கு உபயோகிக்க வேண்டும்.''

இவ்வாறு கரைச்சி கிராம சபைத்தலைவர் திரு. வீ. ஆனந்தசங்கரி புளியம்பொக்கணைச்சந்தியில் கரைச்சி கிராமசங்கத்தால் அமைக்கப்பட்ட சித்த ஆயுள்வேத வைத்தியசாலையைக் குத்துவிளக்கேற்றித் திறந்துவைத்துப் பேசுகையில் கூறினார்.

''ஸ்தல ஸ்தாபனங்களின் சேவைகளையும் கரைச்சி கிராமச்சபை சாதித்தகிட்டங்களையும் விபரித்த திரு ஆனந்தசங்கரி உருத்திரபுரத்திலும், அக்கரையன் குளத்திலும், வட்டக்கச்சியிலும் மேலும் இத்தகைய இலவச வைத்தியசாலைகள் ஒருவாரத்தினுள் திறக்கப்படும் என்று உறுதிகூறினார்.

திறப்புவிழாவுக்குப் பின்பு நடந்த பொதுக்கூட்டத்தில் தலைமைவகித்து உரையாற்றிய சமாதானநீதிபதி திரு. எம். ரி. சுப்பிரமணியம் தமது தலைமையுரையில் ''கருணையுள்ளத்துடன் கண்ணியமும் உடையவர்களுக்குத்தான் நோய்களைப்போக்கும் பணிபொருந்தும் என்றும் நிலையத்திற்குப்பொறுப்பாளரான டக்டர் எஸ். விநாயகமூர்த்தி வைத்திய பரம்பரையைச் சேர்ந்தவரென்றும் இத்தகைய இலவச வைத்தியசாலைகளைத் திறக்கும் கரைச்சிக் கிராம சபை ஏனைய ஸ்தல ஸ்தாபனங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாகவும் முன்மாதிரியாகவும் இருக்கிறதென்றும் கூறினார். மற்றும் பலர்பேசினர்.

இளங்கோ சனசமூக நிலையச் செயலாளர் திரு. பி. தனபாலசிங்கம் நன்றி கூறினார்.

# கிராம சபை தீர்மானம்

கொக்குவில், புதன்

கொக்குவில் கிராம சபையின் விசேஷ கூட்டமொன்று அண்மையில் கூட்டப்பட்டபொழுது கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோயில் திருவிழாவுக்கு கிராம சபையின் ஆதரவில் இலவச மின்சாரம் அளிப்பதென்று ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது.

ஆறு அங்கத்தவர்களின் கோரிக்கை மீது கூட்டப்பட்ட இவ்விசேஷ கூட்டத்துக்கு கிராம சபை உபதலைவர் திரு. சி இரத்தினசிங்கம் தலைமைவகித்தார். கூட்டத்துக்கு ஏழு பேர் சமுகமளித்திருந்தனர்.

# 'ஆலயத்தொண்டு சிறந்தது'

கோண்டாவில், வியா.

''தொண்டுகள் பலவற்றிலும் சிறந்த தொண்டு ஆலயத்திருப்பணித் தொண்டாகும். பண்டைக் காலந்தொட்டு சைவமக்கள்சமய வளர்ச்சியில் மேம்பட்டு வந்திருக்கிறார்கள். ஆலயத் திருப்பணிகளில் நாம் முன்னின்று உழைப்போமானால் எவ்வித குறையுமின்றி வாழலாம்.''

இணுவில் தெற்கு ஸ்ரீபரராசசேகரப்பிள்ளையார் கோவில் புதியசித்திரத்தேர் வெள்ளோட்டவிழாவில் கலந்துகொண்டு உரைநிகழ்த்துகையில் வலிகாமம் வடக்கு காரியாதிகசரி திரு. ரி-முருகேசம்பிள்ளை குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் ஆலயத்திருப்பணிகளில் ஈடுபடும் சிற்பாசாரிகள் தம்முடன் சிற்பக்கலைகள் மறைந்துவிடாது இருப்பதற்கு இளைஞர்களை சிற்பக்கலைகளில் ஈடுபடுத்தி அவர்களையும் பயிற்றுவிக்கவேண்டும். பண்டைக்கால விதிமுறைகளுக்கு அமைய அலங்காரரூபமாக புதிய சித்திரத் தேரை உருவாக்கிய சிற்பாசாரி திரு. செ. கந்தசாமியை நான் போற்றுகின்றேன்என்றார்.

# 'சிறந்த வழியில் செயலாற்றுக'

யாழ்ப்பாணம், வியா.

வண்ணை கொண்டலடிசன சமூக நிலையத்தை திரு. சி. பத்மநாதன் ஜே. பி. சம்பிரதாய முறைப்படி திறந்து வைத்தார்.

திருபத்மநாதன் நிலையத்தைத் திறந்துவைத்துப்பேசுகையில் குறிப்பிட்டதாவது: சனசமூக நிலையங்கள் சிறந்த வழியில் கலாசாரத்தை வளர்க்கவேண்டும். அத்துடன்கலைவகுப்புகள் தொழிற் பயிற்சி வகுப்புக்கள் முதலியனவற்றிலும் இளைஞர்களை ஈடுபடுத்த சனசமூக நிலையங்கள் முயற்சி செய்தல்வேண்டும் என்றார். கலைநிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெற்றன.

# சீவல்தொழிலாளர் சச்சரவு

சுழிபுரம், வியாழன்

சுழிபுரம்திருவடிநிலைகரையோரத்தில்உள்ளபனைகளில் கள்ளிறக்கும் சீவல் தொழிலாளர்களுக்கிடையே ஏற்பட்ட சச்சரவு காரணமாக அவர்களுக்குச் சொந்தமான பனைமரங்களிலுள்ள பாளைகளை, கள்ளு முட்டிகளுடன் இனந்தெரியாத கோஷ்டியினர் வெட்டி சேதம் செய்துள்ளனர். [illegible] பாதிக்கப்பட்டவர்கள் பொலிசாருக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.


## தேசியப்பற்று உடையவராயிருங்கள்

நாட்டின் பணத்தை சேமிக்கவும்—குடும்ப ஆரோக்கியத்தை விருத்தி செய்யவும்

## குண்டசாலை அரிசியை

சாப்பிடுங்கள்.

* 100 வீதம் மண், கல் இல்லாதது.
* 100 வீதம் துர் நாற்றமற்றது.
* சத்துள்ளதும் போஷாக்கு மிகுந்ததும்.
* சுவையான அவித்த புளுங்கல் அரிசி.

குண்டசாலை அரிசியை நீங்கள் வாங்கிச் சமைத்தால் 20 வீதம் கூடுதலான அளவை பெறுவீர்கள்.

ஏனென்றால் அது மூன்று மணித்தியாலம் மட்டும் அனலில் அவிய வைத்தது, குறுணி இல்லாதது.

இன்று குண்டசாலை அரிசியை ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். பின்னர் தினமும் அதையே வாங்குவீர்கள்.

கொழும்பு விநியோகஸ்தர்:

சிலோன் மிட்கன்றி ட்றேடிங் ஏஜென்ஸி

181, பழைய சோனக தெரு, கொழும்பு—12

தொலைபேசி: 4912

புறக்கோட்டை வியாபாரிகளிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

கண்டி விநியோகஸ்தர்:

ஸ்ரீ முத்துமாரி ஸ்ரோர்ஸ், — கண்டி.

கண்டி சில்லறை வியாபாரிகளிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

வர்த்தக சம்பந்தமான விசாரணைகள்:

ஜெனரல் புறடக்ட்ஸ உற்பத்தி ஆலை

குண்டசாலை, குருதேனியா.

தொலைபேசி: 308



வீட்டை நடத்திக்களைத்த அம்மாவுக்கு

## மாமைட்



பட்டிட்டுப் பொட்டிட்டுச் சிறுவர்களை பாடசாலைக்கனுப்பி



வீட்டைக் கூட்டி, ஒழுங்குபடுத்தி



ஓய்வற்ற சமையல் வேலைகளை நாள்தோறும் செய்து களைத்திருப்பதால்



தேக சுகத்திற்கும் தெம்பிற்கும் விசேஷமாக அம்மா அருந்துவது மாமைட்

சக்தி மிகுந்த சுகவாழ்வுக்கு உங்கள் தினசரி ஆகாரத்தில் B விட்டமின்கள் அவசியம். அனுதினமும் தேவையான B விட்டமின்கள் அனைத்தையும் கொண்ட ஒரு சிறந்த உணவு மாமைட். வெந்நீரிலோ அல்லது வெந்நீருடன் ஓரிரு சொட்டு எலுமிச்சப் பழச்சாறு கலந்தோ அல்லது தாளித்தோ மாமைட் அருந்தலாம்.






மாவுப் பொருள் சர்க்கரைப் பொருள் அற்ற, B விட்டமின் நிறைந்த, தூய்மையான, தாவர உணவுப் பொருள்.

029/66


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## காணி அதிகாரி விஜயம்

வவனியா, வியாழன்

வவனியாவில் உள்ள முத்தையன்கட்டு, குருமன்காடு குடியேற்றத்திட்டம் காணிவிநியோகம் பற்றி நேரடியாக ஆராய்வதற்கு காணி கமிஷனர் இன்று உத்தியோக பூர்வமாக இங்குவருவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வவனியா எம். பி. திரு. த. சிவசிதம்பரத்தின் அழைப்பின் பேரிலேயே காணி கமிஷனர் இங்கு வருகின்றார்.

## மழையினல் நஷ்டம்

வவனியா, வியாழன்

வவனியாவில் தொடர்ச்சியாக பெய்துவந்த மழை காரணமாக சுமார் 40 ஏக்கருக்கு மேல் வைக்கக்கூடிய பம்பாய்வெண்காய நாற்றுக்கள் அழிந்துவிட்டன. இதனல் விவசாயிகளின் மிளகாய் நாற்றும், கத்தரி நாற்றும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

REGAL—JAFFNA
NOW SHOWING!
Dirk Bogarde - Mary Ure
in
THE
MIND BENDERS
(Adults Only)

நியூ கஸங்கை
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
சிவாஜி - தேவிகா
நடித்த
முரடன் முத்து

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45க்கு
மனேகர் - மனேரமா
நடித்த
கொஞ்சும் குமரி

## விவசாயப் பயிற்சி

வவனியா, வியாழன்

வவனியாவில் உள்ள விவசாயப் பாடசாலையில் இன்று தொடக்கம் ஆசிரியருக்கு ஆறுமாதகாலம் விவசாய பயிற்சி அளிக்க விவசாயப்பகுதி ஒழுங்கு செய்துள்ளது.

இப்பயிற்சிக்கு காரியாதிகாரியின் பிரிவின்படி பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியர்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## 'ஆசிரியர்களை மதிக்கவேண்டும்'

உடுப்பிட்டி, வியாழன்

"மாணவர்கள் ஆசிரியர்களை மதிக்கப் பழகவேண்டும். இக்காலத்தில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வித்தியாசமே தெரிவதில்லை. மாணவர்கள் கல்வியைத் தமது பெற்றேருக்கு ஒப்பாகக்கொள்ளவேண்டும் கல்விதான் உலகை முன்னேற்றும் கருவி.

இவ்வாறு கரணவாய் வடக்கு பொன்னம்பலவித்தியாசாலையிலிருந்து கண்டியிலுள்ள மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றலாகிச் செல்லும் ஆசிரியை திருமதி கந்தையா மகேஸ்வரி மேற்படி வித்தியாசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் தமக்களித்த பிரிவுபசார விழாவுக்கு நன்றிதெரிவித்துப் பேசுகையில் கூறினர்.

வித்தியாசாலைத் தலைமையாசிரியர் திரு. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் ஆசிரியையின் சேவையைப் பாராட்டி மாணவர்களும், சக ஆசிரியர்களும் பேசினர்.

## தேர்த்திருவிழா

சுழிபுரம், வியா.

சண்டிலிப்பாய் சீரணி நாகம்மாள் கோவில் தேர்த்திருவிழா நேற்று நடைபெற்றது. ஆயிரக்கணக்கானமக்கள் தேர்த்திருவிழாவில் கலந்துகொண்டனர்.

கிங்ஸ்லி (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
போயா நாட்களில் 4 காட்சிகள்.
விஜயா (மட்டக்களப்பு)
ஸ்ரீகிருஷ்ணு (திருகோணமலை)



சிவாஜி கணேசன் - சாவித்திரி
(9 மாறுபட்ட வேடங்களில்)
நாகேஷ் —— மனேரமா
மற்றும் பலர் நடித்திருக்கும்
நவராத்திரி

# காயம் விளைவித்ததான பொலிஸ் அதிகாரி மீது வழக்கு

மாவிட்டபுரம், வியா.

காங்கேசனதுறை உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன்திரு. வை.டி. செனரத், பொலிஸ் கான்ஸ்டபிள்களான 2265 இலக்கமுடைய செனரட்ன, 8208 இலக்கமுடைய பியரட்ன ஆகியமூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களும் சென்றவருடம் ஆகஸ்ட் மாதம் பத்தாந் திகதி கீரிமலையைச்சேர்ந்த சின்னத்தம்பி நாகமணி என்பவர் பொலிஸ்பாதுகாப்பிலிருந்த சமயம் அவரைக் கையால் அடித்தும் காலால் உதைத்தும் அவருக்குக் காயம் விளைவித்ததாகவும். அவரைப் பொலிஸ் பாதுகாப்பில் வைத்துப் பயமுறுத்தியதாகவும் எல்லாமாக இரண்டு குற்றங்கள் சாட்டித் தொடரப்பட்ட தனிப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எப். எச். அத்துறுபாணு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எதிரிகள்சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. எஸ், நடராசா நீதிபதியிடம் முதலாம் எதிரியும் உதவிப்பொலிஸ் சுப்பிரிண்டனுமான திரு. செனரத் கொழும்புக்கு இடமாற்றம்பெற்றுச் சென்றுள்ளதால் அவர் அடிக்கடி வருவது அவருக்குச் சிரமமாயிருக்குமாகையால் வழக்கை இன்று விசாரணைக்கு எடுத்தல்வேண்டுமென்று விண்ணப்பிதார்.

இதனை ஆட்சேபித்த வழக்காளிதரப்பு வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் நீதிபதியிடம் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட வழக்காளி எதிரியாக உள்ள மற்றோர்வழக்கு இக்கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருப்பதால் ஒரே சம்பவத்தைப்பற்றி இருதரப்பிலும் உள்ள இருவழக்குகளையும் ஒரே நீதிபதி விசாரிப்பது நல்லதல்லவென்றும் ஆகையால் இவ்வழக்கை யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் நீதிபதி விசாரிக்கக்கூடியதாக அங்குமாற்றும்படியும் விண்ணப்பித்தார். இதனை எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபித்தார். ஆட்சேபனையை நிராகரித்த நீதிபதிவழக்கை யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிமன்றத்திற்கு அனுப்பும்படியும் எதிரிகளை இம்மாதம் 23-ந் திகதி யாழ்ப்பாணம் பொலிஸ் கோர்ட்டில் ஆஜராகும்படியும் அன்று வழக்கு அங்கு கூப்பிடப்பட்டு விசாரணைக்கான திகதி அறிவிக்கப்படும் என்றும் உத்தரவிட்டார்.

## மூளை நோய்

மூளையிலுள்ள இரத்தக் குழல்களில் நோய் கண்டால் அதற்கு அறுவைச் சிகிச்சை செய்வது, நவீன வைத்திய முறைகளில் ஒன்ருகும். மூளை இரத்தக் குழல்கள், ஏதேனும் சில காரணங்களால், வெடித்து ரத்தப்பெருக்கு மூளையினுள்ளேயே ஏற்படுமனல், அது மரணத்தையும் விளைவிக்கக்கூடும். இப்படிப்பட்ட இரத்தக்குழல் வெடித்தல், நடுவயதினருக்கு மட்டுமன்றி, இளைஞர்களுக்கும் குழந்தைகட்கும் கூட ஏற்படுகின்றது.

இவை ஏற்படக் காரணம் என்ன என்பது அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டது. இதற்காக, ஒரு பொருள் மூளை ரத்தக்குழல்களுக்கு அனுப்பப்பட்டு, அக்குழல்களில் ஏற்படும் மாறுபாடுகள் ஒரு எக்ஸ்-ரே படத்தில் பதிவு செய்யப்படுகிறது. ரத்தக் குழலின் சுவர்கள் மெல்லியதாக ஆகிவிடுவதால்தான், குழல்கள் சில சிலவிடங்களில் வெடிக்கின்றன என்று கூறப்படுகிறது.

இதைத் தடுக்கத்தான் தற்போது அறுவைச் சிகிச்சையை வெற்றிகரமாகப் பயன்படுத்துகின்றனர்.

தவிர, மிகை ரத்த அழுத்தம் காரணமாக ஏற்படும் இரத்தக் குழல் வெடிப்பைச் சமாளிக்கவும், பிறமருந்துப் பொருட்களை விட, அறுவை வைத்தியம் சிறந்ததாக இருக்கக்கூடும்.

மூளை இரத்தக் குழல் அறுவைச் சிகிச்சையில் இன்னும் பலபல ஆராய்ச்சிகள் நடத்தப்பட வேண்டியுள்ளன. இத்துறையில் ஏற்படும் முன்னேற்றங்களின் காரணமாக, எத்தனையோ மூளைநோய்கள் குணப்படுத்தப்பட முடியும்.

சுவாசம், இருதய ரத்த ஓட்ட மண்டலங்களைக் கட்டுப்படுத்தும், மிக முக்கியமான மத்திய நரம்பு மண்டலப்பகுதி அதிர்ச்சியினலும் காயங்களினலும் பாதிக்கப்படலாம். சமீபகாலம்வரை இவ்வகை நோய்கட்கு மருந்தே இல்லாமலிருந்தது. ஆனல் நரம்பு அறுவை வைத்தியத் துறையில், 'புதுப்பித்தல்' எனும் புதிய முறை இப்பொழுது கடைப்பிடிக்கப்படுவதனல், மேற்சொன்ன நோயாளிகள் பலனடைவர்.

ஒரு உயிர்ப் பொருளின் பிரதான வேலைகள் பழுதுபட்டிருந்தால், அதை மீண்டும் இயக்குவதே 'புதுப்பித்தல்' எனப்படுவது. மிகச் சிக்கலான, செயற்கைச் சுவாசக் கருவிகள், இருதய வேலையைத் தூண்டும் கருவி பல புதிய ரசாயன மருந்துப் பொருள்கள் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டதன் பின்னரே இது சாத்தியமாயிற்று.

மூளைவீக்கம் ஏற்படுவதையும் இப்பொழுது குணப்படுத்திவிட முடியும். 'மூளைவீக்கத்தை வற்றவைக்க முடிந்தால், அது நோயாளியின் வாழ்விற்கே திறவுகோல். இப்பொழுதோ, உயிரியல் ரசாயனத்துறை வேகமாக வளர்ச்சியடைந்துள்ளதால், பல்வேறு வீக்கத்தைத் தடுக்கும் மருந்துப் பொருள்கள் கண்டு பிடிக்கப்பட்டன. இப்பொருட்களின் உதவியால், பல்வேறு மூளைக்கட்டிகளும் இப்பொழுது ஆபத்து எதுவுமின்றி, அறுவைக்கத்தியின் மூலம் குணப்படுத்தக்கூடும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. மூளைக் கட்டிகளைக் கண்டு பிடிக்கவும், அதைக் குணப் [illegible] புக்களும் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றின் பலனாக [illegible] ஆயுள் மேலும் நீடிக்கும் என்று நம்ப இடமுள்ளது.

## சன சமூக நிலைய கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

மண்டைதீவு வள்ளுவன் சன சமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நிலையத்தலைவர் திரு. இ. கந்தையாவின் தலைமையின்கீழ் நடைபெற்றது.

நிலையத்தின் புதியநிர்வாகிகளாக பின்வருவோர்தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு. இ. கந்தையா, உபதலைவர்: திரு. வ. கணபதிப்பிள்ளை, செயலாளர்: திரு. ம. பங்கிராஸ், உபசெயலாளர்: திரு. சி. பாலலிங்கம், பொருளாளர்: திரு. வி. செல்லையா, காப்பாளர்: திரு. ச. சின்னத்துரை, பரிசோதகர்: திரு. யோ. சி. பி. சேவியர்.

ஒன்பதுபேரைக்கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

வவனியா நகரசபை எல்லைக்குள் வேப்பங்குளத்தில் (பிரதான வீதி) 5 ஏக்கர் நிலம் விற்பனைக்குண்டு. 80 அடி அகலமுள்ள கிணறு அடங்கிய இக்காணியில், 75 தென்னை மரங்களும், 30 மா மரங்களும் வேறு பிரயோசனங்களும் உண்டு. வீடு கட்டவும் தோட்டம் செய்யவும் உகந்த இடம். எஸ். சந்திரசேகரம், தபாற்கந்தோர், வவனியா. 291

பரந்தன் கண்டாவளை ரோட்டு இரணைமடு மேற்கு சங்கத்துக்குஎதிராக 16 1/2 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு. விபரத்துக்கு C/o 'ஈழநாடு', விளம்பர இல. 296 என எழுத்துமூலம்விண்ணப்பிக்கவும். 296

500 முகச்சவரத்தில் இனம்! இனம்!! ரூபா 25/- இனம்!!! பிரசித்திபெற்ற சாப்பினிங் கொம்பவுண்டைக்கொண்டு ஒரேஒரு பிளேட்டில் நூற்றுக் கணக்கான சுத்தமான முகச்சவரஞ் செய்வதால் இனம். 15 சதப் பக்கெற்றில் பரீட்சியுங்கள். ஓமேகா, கொடிகாமம். 298

### தேவை

வடமராட்சி மகளிர் மன்றம் மாணவிகளுக்கு, நடனம் பயிற்றுவிப்பதற்கு நடன ஆசிரியை தேவை. கலாக்ஷேத்திரப்பயிற்சிபெற்றவர்கள் 15-5-66-க்கு முன் விண்ணப்பிக்கவும். சாவித்திரி தேவி மாணிக்கவாசகர், செயலாளர், வடமராட்சி மகளிர் மன்றம், பிரதான வீதி, பருத்தித்துறை. 299

## சூதாட்டக்காரர் கைது!

யாழ்ப்பாணம், வியா.

சண்டிலிப்பாய் சீரணி நாகம்மாள்கோவிலில்தேர்த் திருவிழாவில் சூதாடியதாக சந்தேகத்தின்பேரில் இருவர் சங்கானை பொலிசார் கைதுசெய்து ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர். ந.நி.

## முத்திரைக் காட்சி

கொழும்பு, வியாழன்

சர்வதேச முத்திரைக் கண்காட்சி இன்று கொழும்பு லயனல்வென்ட் தியேட்டரில் ஆரம்பமானது.




### கொழும்பு

வெள்ளி 6 - 5 - 66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-15 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல், 7-30 குரல்வகை, 7-45 தோத்திரப்பாடல்கள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

844 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 திரைஇசை, 1-00 கதம்பஇசை,

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 படத்திலிருந்து.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 முத்திநெறி, 7-15 பாட்டு. 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-15 நாடகம், 8-45 இஸ்லாமிய கீதங்கள், 9-30 கிளாரினெட். 10-00 நீங்கள் கேட்டவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் இன்ஸ்பெக்டர் மீதான வழக்கு ஒத்திவைப்பு

மாவிட்டபுரம், வியா

காங்கேசன்துறை பொலிஸைச் சேர்ந்த சப்-இன்ஸ்பெக்டர் திரு. ஏச். எம். ஜாவ்வார் என்பவர் சென்ற வருடம் ஆகஸ்ட் மாதம் 10ந் தேதி கீரிமலையைச் சேர்ந்த சின்னத்தம்பி நாகமணி என்பவருக்குச் சொந்தமானதும், 15 ரூபா பெறுமதியானதுமான அலவாங்கைத் திருடியதாகவும் நாகமணியின் மனைவி அன்னலட்சுமியைப் பயமுறுத்தியதாகவும் அன்னலட்சுமி மேல் பலாத்காரம் பிரயோகித்ததாகவும், அன்னலட்சுமிக்கு எதிராக எவ்வித புகாரோ குற்றச்சாட்டோ இல்லாத போதிலும் அவரைச் சட்ட விரோதமாகப் பொலிஸ் ஜீப்பில் அழைத்துச் சென்றதாகவும், அன்னலட்சுமிக்கு எதிராக எவ்வித புகாரோ குற்றச்சாட்டோ இல்லாத போதிலும் அவரைச் சட்ட விரோதமாக பொலிஸ் பாதுகாப்பில் வைத்திருந்ததாகவும், எல்லாமாக ஐந்து குற்றங்கள்மீது தொடரப்பட்ட தனிப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எவ். எச். அத்துறுபான முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

நீதிபதி வழக்கை விசாரணைக்காக இம்மாதம் 24ந் திகதிக்கு ஒத்திவைத்தார். எதிரிதரப்பில் வழக்கறிஞர் திரு. ஜி. வி. பாலசிங்கத்தின் அனுசரணையுடன் திரு. ஆர். கண்ணுத்துரை ஆஜரானார். வழக்காளி தரப்பில் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார்.

# தகாதமுறையில் நடந்தாராம்: பஸ் சாரதிமீது புகார்

யாழ்ப்பாணம், வெள்ளி

வேலையிலிருந்து திரும்பிக்கொண்டிருந்த இளம் யுவதியுடன் தகாத முறையில் நடந்துகொண்டதாகச் சொல்லப்பட்ட இ. போ. ச. சாரதியொருவர் ஆனைக்கோட்டைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நவாலியைச்சேர்ந்த ஆறுமுகம் மகுடராணி என்ற பதினெட்டு வயது இளம்பெண் ஆனைக்கோட்டை பொலிஸில்செய்தபுகாரைத் தொடர்ந்தே பொலிஸ் சார்ஜண்ட் ராசநாயகம் மேற்படி நபரைக் கைதுசெய்தார்.

திருநெல்வேலியிலுள்ள நெசவுநிலைய மொன்றில் வேலைசெய்யும் மகுடராணி என்ற இந்த யுவதி வேலை முடிந்து, பஸ்ஸில் வீடுதிரும்பிக்கொண்டிருக்கையில், சின்னத்தம்பி சின்னராசா என்ற இ. போ. ச. சாரதியும் அதே பஸ்ஸில் பிரயாணம் செய்துகொண்டிருந்தாரென்றும், மானிப்பாய் மருதடிப்பிள்ளையார் கோவிலடியில் அந்தப்பெண் இறங்கியபோது மேற்படி பஸ்சாரதியும் இறங்கி பின் தொடர்ந்ததாகவும், நவாலி கடலையடியில் வைத்து பஸ் சாரதிஅவரைப்பலாத்காரம் செய்ததாகவும் விசாரணையின்போது கூறப்பட்டது.

வைத்திய அதிகாரியின் அறிக்கையை பொலிஸார் எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

## பொலிஸ் காவல்

யாழ்ப்பாணம், வியா.

கணபதி இராசா என்பவர் சட்ட விரோதமான கத்தியொன்றை வைத்திருந்ததாக சங்கானைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். விசாரணையின்போது இவர் பல குற்றங்கள் செய்ததாகத் தெரியவந்தது. பொலிஸார் அவரைக் காவலில் வைத்துள்ளனர்.

(ந. நி.)

கல்வி

பலாலி விசேட ஆசிரிய பயிற்சி விண்ணப்பப் பத்திரத்திற்கு 5-10 சத முத்திரையுடன் விண்ணப்பிக்கவும். வர்த்தகக்கல்வி நிலையம், திருநெல்வேலி. 300

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

டுக்குப் பெரிதும் நன்மையளிக்கும்.

ஃ ஃ ஃ

84 வயதான புலவர்மணி சரவணையூர் தில்லைநாதபிள்ளையவர்களுக்கு, வேலணைமக்கள் பொன்னாடை போர்த்தி, பொற்கிழி அளித்துக் கௌரவித்தார்கள். அந்த வைபவம் மிகச்சிறப்பாக நடந்தது. சைவமும், தமிழும் ஓர் உருவெடுத்ததுபோல் பொலிந்தது அப்பெரியாரின் தோற்றம். எவ்வளவு அடக்கம்! அப்பெரியார் நீடுழி வாழ்க.

அக்கூட்டத்தில் பேசிய கொக்குவில் குமாரசுவாமிப்புலவரவர்கள், தமிழும் சைவமும் ஒன்றே என்றும் அதைப் பிரிக்க முடியாதென்றும் ஆணித்தரமாகப் பேசினார்.

இங்கு தமிழ்ப்பல்கலைக் கழகம் வேண்டுமா, அல்லது சைவ சர்வகலாசாலையா என்பதுபற்றிப் பலத்த வாக்குவாதம் ஏற்பட்டுள்ளதல்லவா? புலவரவர்களின் பேச்சைக் கேட்டபின், பெயரைப் பற்றி சச்சரவிடுவது அர்த்தமற்றதென்றும், ஏதாவது ஒரு சர்வகலாசாலை ஏற்பட்டால் போதும் என்றும் தோன்றியது.

ஆனால் இவ்விஷயத்தில் தமிழ்த் தலைவர்களுக்குள் ஒரு சமரசம் ஏற்படாமல் இருக்கும் வரை இருவருக்கும் ''பெப்பே'' ஆகிவிடுமோ என்றும் அஞ்சப்படுகிறது. வடபகுதித் துறைமுக விஷயம் நம் தலைவர்களுக்கு ஓர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

ஃ ஃ ஃ

அலையார் வினைத்திறஞ்சேராக்கை யுள்ளேயகப்பட்டு ளாசை யென்னும் பாசந்தன்னுள், தலையாய் கடையாகும் வாழ்விலாழ்ந்து தளர்ந்துமிக நெஞ்சமே அஞ்ச வேண்டா, இலையார் புனற்கொன்றை யெறிநீர்த்திங்கள் இருஞ்சடைமேல் வைத்துகந்தான் இமையோரேத்தும், நிலையானுறை நிறை நெய்த்தானமென்று நினையுமா நினைந்தக்காலுய் யலாமே.

— அப்பர்சுவாமிகள்

## கிருஷ்ணன் இல்லை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்துகொள்வதாலும், முகர்ஜி இத்தாலியில் நடைபெறும் போட்டியில் கலந்து கொள்வதாலுமே இந்த நிலை ஏற்பட்டிருப்பதாய்க் கூறப்படுகிறது.

## தியேட்டர் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளன. ஆனால் எதிர்பாராத அளவு ஜனக்கூட்டம் இருந்ததால் ஏற்கனவே டிக்கெட்வாங்கியவர்களில்சிலர் தியேட்டருக்குள் பிரவேசிக்கவே முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது.

குறிப்பாக பெண்கள் பலர், மாலை 6 மணியிலிருந்தே கடைசி இரு வகுப்புகளுக்கு டிக்கெட் பெறுமுகமாக தியேட்டர் வாசலில் காத்திருந்தனர். எனினும் இரவு 10 மணியளவில் டிக்கெட் இல்லை என்று ஏமாற்றமான பதிலுடன் அவர்கள் வீடு திரும்பும்படி நேரிட்டது. கர்ப்பிணிகளும் பிள்ளைகளுடன் சென்றவர்களும் இவர்களில் அடங்குவர். டிக்கெட் இல்லாத ஏமாற்றம் ஒருபுறமிருக்க, நெரிசல் காரணமாக படம் பார்க்கச் செல்லும் முயற்சியை அவர்கள் கடைசி நிமிடத்தில் கைவிட்டனர்.

உணர்ச்சிகொண்ட ரசிகர்களால் தியேட்டரில் பல கதவுகள் பெயர்க்கப்பட்டு, பூட்டுகளும் உடைக்கப்பட்டதாகவும், வெளிச்சுவர் தகர்க்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

தியேட்டரின் மேல் மாடியிலுள்ள லொபியில் இராஜேந்திரன் தம்பதிகள் தோன்றி மக்களை அமைதியாகக் கலைந்து செல்லுமாறு கூறியதைத் தொடர்ந்து ஜனக்கூட்டம் கலைந்தது. உள்ளே இருந்த ஜனத்திரளிலும் பார்க்க அதிகமாகத் திரண்டிருந்த வெளிஜனக்கூட்டம் இராஜேந்திரனை தியேட்டர்மேல் மாடியில் கண்டுவிட்டுக்கலைந்தது.

ஜனக்கூட்டத்தைக்கட்டுப்படுத்த ஒரு சமயங்களில் பொலிசார் தடியடிப் பிரயோகம் செய்யவேண்டி ஏற்பட்டது என்றும், இதனால் சிலருக்குக் காயம் ஏற்பட்டதென்றும் கூறப்படுகிறது.

## ஊழல்களை.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பின்மையும் தகராறுகளும் ஏற்பட்டதைத் தொடர்ந்து குறித்த அதிகாரங்களை உள்ளூராட்சி அதிகாரசபையிடமிருந்து விலக்கி, உள்ளூராட்சி அமைச்சின் நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர மந்திரியின் புதிய திட்டம் வழிவகுத்துள்ளது.

உள்ளூராட்சி ஊழியர்களின் நியமனம் இடமாற்றம், சேவை நிபந்தனை ஒழுங்கு நடவடிக்கை, முதலியவை உள்ளூராட்சி அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் இயங்கக் கூடிய வகையில் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாகவும் அவைகள் விரைவில் நடைமுறைக்கு வருமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நகர நிர்மாணத் திட்ட இலாகா, குடி நீர் விநியோகத்திட்ட இலாகா, வடிகால் அமைப்பு திட்ட இலாகா, வடிகால் அமைப்புத்திட்ட இலாகா முதலிய முக்கிய இலாகாக்களை அமைச்சின் பொறுப்பின் கீழ் கொண்டுவரவும் மந்திரியின் திட்டம் இடமளித்துள்ளது.

உள்ளூர் அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டு மந்திரி சபையினால் அங்கீகரிக்கப்பட்ட இத்திட்டங்கள் விரைவில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படுமெனத் தெரியவருகிறது. (ந. நி.)

# ''பௌத்த தர்மம் நாட்டின் கலாச்சாரத்தை மாற்றியது''

## கண்காட்சி திறப்புவிழாவில் ஜே. ஆர். பேச்சு

கொழும்பு, வியா,

புத்த போதனை உலகில் புதிய உத்வேகத்துடன்பரவ ஆரம்பித்துவிட்டது என்றும். இலங்கை புத்ததர்மத்தைஏற்றபின்நாட்டின் கலாச்சாரம் வெகுவாக மாறிவிட்டது என்றும் ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன கொழும்பில் பௌத்த கண்காட்சி ஒன்றைத் திறந்துவைத்துப் பேசுகையில் கூறினார்.

''நூற்றாண்டுக்காலம் அன்னியர் ஆட்சி நீடித்த போதிலும் பௌத்த தர்மத்தை எவராலும் அழிக்கமுடியவில்லை. பௌத்த கலாச்சாரம் உலகையே மாற்றியமைத்திருக்கிறது'' என்றும் அவர் தொடர்ந்து கூறினார்.

கண்காட்சியில் 253புகைப்படங்கள் இடம்பெற்றிருந்தன. திரு. ஜயவர்த்தனவும் கொழும்பு மேயரும், இந்திய ஹைகமிஷனர் திரு. சச்சாரும் அங்கு குத்துவிளக்கேற்றி வைத்தனர்.

நேற்று கொழும்பில் தானம். சீலம், தியானம், கவர்ச்சிப் பந்தல்கள் ஆகியன இடம்பெற்றிருந்தன. அட்ட சீலமும், நாள் முழுதும் வழிபாடுகளும் நாடெங்கும் இடம்பெற்றன. பௌத்தகொடிகளும் பல்லாயிரம் வர்ணவிளக்குகளும் எங்கும் காணப்பட்டன. காலிமுக மைதானத்தில் பெருங்கூட்டம் திரண்டிருந்தது. விமானத்திலிருந்து நகரைப்பார்க்க அதிஅழகுடன் காட்சியளித்தது.

கல்வியமைந்திரி, இன்று புத்தர் சிலைகளின் பரிணாமவளர்ச்சி கண்காட்சி ஒன்றை திறந்துவைத்தார்.

சுகததாஸ அரங்கில் இசை நடன நிகழ்ச்சிகள் இடம் பெற்றிருந்தன.

இந்தியாவில் புத்தகயாவிலுள்ள மகாபோதி ஆலயத்துக்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் ஊர்வலமாகச் சென்றனர். 2500 ஆண்டுகளுக்குமுன் புத்தர் ஞானம் பெற்ற அரசமரத்தடியில் அவர்கள் அமர்ந்திருந்தனர்.

பர்மா நன்கொடையளித்த புத்தர் சிலையைக் கொண்ட பௌத்தாலயத்தை ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் நேற்று ஜாம் ஷெட்பூரில் ஆரம்பித்துவைத்தார்,

# உருத்திரபுரத்தில் இந்து மாதர் ஆசிரமம்

உருத்திரபுரம், வியா.

உருத்திரபுரம் ஸ்ரீ மகாதேவா ஆசிரமத்திலே சென்ற வாரம் நடைபெற்ற விசேஷ கூட்டத்தில் இந்து மாதர் ஆசிரம சங்கம் அமைப்பதென்று தீர்மானிக்கப்பட்டு கீழ்க்கண்ட நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர், தலைவர்: திருமதி சின்னம்மா கதிர்வேலு, உபதலைவர்: திருமதி பூரணம் சண்முகநாதன், காரியதரிசி: திருமதி மெய்ஞ்ஞான சுந்தரத் தமயந்தி, உபகாரியதரிசி: திருமதி குணநாயக நாகலிங்கம், தனாதிகாரி: திருமதி தையல்முத்து சிவகந்தையா. நிர்வாகசபை அங்கத்தவர்களாக செல்வி க. பார்வதி, திருமதிகள் பூமணி சதாசிவம், வள்ளியம்மை சுப்பிரமண்யம், மீனாம்பிகை ஐயாத்துரை.

## ஓமந்தை...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

சந்தர்ப்பத்தில் நீதிபதி, இவ்வழக்கின் முக்கிய சாட்சியான வாடகை மோட்டார் கார் சாரதி தர்மராஜா அளித்த சாட்சியம் நம்ப முடியாமலிருக்கிறதென்றும் மாறுபட்டமுறையில் அவர் சாட்சியமளித்திருக்கிறார் என்றும் குறிப்பிட்டார். கூட்டுறவுச் சங்கத்திலிருந்து திருடப்பட்டதாகக் கூறப்படும் புடவைப் பார்சலில் பொலிஸார் கூற்றுப்படி 26-6-64-ம் திகதி (முத்திரை) இடப்பட்ட ஒரு என்வலப் இருந்திருக்க முடியாதென்றும் அன்றுதான் சம்பவம் நடைபெற்றிருக்கையில் அத்தினத்தில் முத்திரை இடப்பட்ட என்வலப், புடவைப் பார்ஸலில் இருப்பதற்கு நியாயமில்லையென்றும் இதனைத்தாம் ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் நீதிபதி சுட்டிக்காட்டினார்.

விசாரணை முடிவில்நீதிபதி 6 எதிரிகளையும் நிரபராதிகளாகக் கண்டு விடுதலை செய்தார். எதிரிகளின் சார்பில் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் திரு. பி. என். றெஜினால்ட் அனுசரணையுடன் ஆஜரானார். முடிக்குரியதரப்பில் திரு. எஸ். சேனாதிராசா ஆஜரானார்.

## சமய சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

இன்று இரவு 9 மணிவரை அகில இலங்கை பொதுஜன சேவைச் சங்க சமயப்பிரசார சபையின் ஆதரவில் பின்வரும் தேவஸ்தானங்களில் பிரசங்கங்கள் நிறைவேறும்:

நாயன்மார்கட்டு இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்தில் மாலை 8 மணி முதல் கதாப்பிரசங்கியார் திரு. த. சுப்பிரமணியம் ''திருஞான சம்பந்தர்'' என்னும் பொருள் பற்றியும், நல்லூர் கிழக்கு மூத்த விநாயகர் ஆலயத்தில் மாலை 7 மணிமுதல் பண்டிதர் இரா. சிவசுப்பிரமணியம் ''ஆனாயநாயனார்'' என்னும் பொருள் பற்றியும் நீராவியடி கடையிற்சுவாமி தேவஸ்தானத்தில் மாலை 7 மணி முதல் கதாப்பிரசங்கியார் திரு. வே. பாலசுப்பிரமணியம் ''கண்ணப்ப நாயனார்'' என்னும் பொருள்பற்றிய பிரசங்கமும் நிகழ்த்துவர்.

## இலங்கையின் எதிர்காலம்

லண்டன், மே 5

இலங்கையின் எதிர்காலம் குறித்து சமீப காலத்தில் வெளிநாடுகளில் நம்பிக்கை அதிகரித்திருப்பதாக இலங்கை கைத்தொழில் மீன்பிடி மந்திரி திரு பிலிப் குணவர்தன இன்று இங்கு கூறினார்.

லண்டனில் சில தினங்கள் தங்கி இருக்கும் பொருட்டு அவர் இன்று இங்கு விஜயம் செய்தார்.

ராமநாதன் சங்கீதக்கல்லூரி

சுன்னாகம்

இன்று வெள்ளிக்கிழமை, விடுமுறைக்குப்பின் மீண்டும் இக் கல்லூரிவகுப்புகள் ஆரம்பமாகின்றன. எல்லா வகுப்புகளுக்கும் மாணவிகள் இப்போது சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

சங்கீத வித்துவான் ஐயாக்கண்ணு தேசிகரின் தலைமையில் இப்போது வகுப்புகள் நடைபெறுகின்றன.

Advt —காரியதரிசி

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி, ... இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு மே மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org